# MELUR MUNICIPALITY
## Minutes of the Council Meeting held on 31.12.2019 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 626 | **மன்றப்பொருள் எண்.1**<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் துறைமூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நுழைவுக்கட்டண ரசீதுகள் 10000(100புத்தகங்கள்) தேவா கார்ட்ஸ்& ஆப்செட் பிரிண்டர்ஸ் நிறுவனம் மூலம் ரூ.1750/– வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஒருவருடத்திற்கான செலவினம் ரூ.21,000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3892/2011/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| 627 | **மன்றப்பொருள் எண்.2**<br><br>இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.மு.மருதநாராயணி(எ) ஜோதி என்பவர் தனது தாயார் வாத நோயால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாத நிலையில் உள்ளதாலும், சுகர் பிரச்சனையாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரை மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு தினமும் அழைத் சென்று காண்பிக்க வேண்டும், தனது தாயாருக்கு ஆண் பிள்ளைகள் இல்லை என்பதால் தான் அவரை கவனித்துக்கொள்ள வேண்டிய நிலை இருப்பதாலும், மேலூரில் போதுமான மருத்துவ வசதி இல்லாத காரணத்தினால் மதுரையில் வைத்து கவனித்து வருவதால் தினமும் மதுரையில் இருந்து மேலூர் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு வரவேண்டியுள்ளது. மாலை தான் பணிமுடித்து வீட்டுக்கு சென்ற பின்பு தான் அவருக்கு உணவு மருந்து மற்றும் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டிய நிலை உள்ளதால் தனது தாயாரின் உடல்நிலை கருதி தனக்கு மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்யுமாறு விண்ணப்பித்துள்ளதை தொடர்ந்து அன்னாரை மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதலில் செல்ல மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br><br>திருமதி.மு.மருதநாராயணி(எ)ஜோதி , வருவாய் உதவியாளரை மேலூர் நகராட்சியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரை செய்து கடிதம் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.262/2019/சி1 | |
| 628 | **<u>மன்றப்பொருள் எண்.3</u>**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளுக்கு ஆறுமாதங்களுக்கு (01.01.2020 முதல் 30.06.2020) தேவையான பல்ப், சோக், உள்ளிட்ட மின் சாதனப்பொருட்கள் விநியோகம் செய்ய ரூ.5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பொருட்களை விநியோகம் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 629 | **<u>மன்றப்பொருள் எண்.4</u>**<br><br>இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி 31.12.2019 உடன் முடிவடைய உள்ளது. எனவே 01.01.2020 முதல் 30.06.2020 வரை ஆறுமாதங்களுக்கு பராமரிப்பு பணி ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 630 | **<u>மன்றப்பொருள் எண்.5</u>**<br>மேலூர் நகராட்சி பேருந்து நிலைய உணவகத்திற்கான 05.09.2019ம் தேதிய பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை வீடியோ மூலம் பதிவு செய்வதற்கு கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>1. நிலா டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோ, 14, நகராட்சி வளாகம், சந்தைபேட்டை, மேலூர். — ரூ.8000<br>2. முத்து ஸ்டுடியோ &வீடியோ திருச்சி மெயின் ரோடு, மேலூர் — ரூ.10000<br>3. கார்த்திக் ஸ்டுடியோ& வீடியோ, மதுரை திருச்சி மெயின் ரோடு, மேலூர். — ரூ.9000<br><br>அலுவலகக்குறிப்பு<br>அவசர அவசியம் கருதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்பள்ளி கொடுத்துள்ள நிலா டிஜிட்டல் ஸ்டுடியோ&வீடியோ நிறுவனம் மூலம் பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.2768/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 631 | **<u>மன்றப்பொருள் எண்.6</u>**<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளில் கீழ்க்கண்ட நபர்கள் தங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வேண்டாம் எனவும் கணினியில் கேட்பினை நீக்கம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்ட நபர்களுடைய குழநீர் குழாய் இணைப்பினை துண்டிப்பு செய்யவும், கணினியில் கேட்பினை நீக்கம் செய்வும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>வ.எண். / பெயர் / குடிநீர் குழாய் இணைப்பு / துண்டிப்பு செய்யப்படும் காலம்<br>1. / எஸ்.ஹபிபா / 116/017/00097 / 31.03.2020<br>2. / செ.கருப்பாயி ஆச்சி / 116/024/00021 / 31.03.2020 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 3. | கே.சுப்பிரமணியன் | 116/018/00041 | 31.03.2020 |
| 4. | பி.தீர்த்தக்கரை | 116/014/00024 | 31.12.2019 |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

632

**<u>மன்றப்பொருள் எண்.7</u>**

அனுமதிக்கப்பட்டது

மேலூர் நகராட்சிப் பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேலூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி திட்டப்பணிகளை கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் வழங்க கோரப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினபூமி | 07.11.2019 | 21,000 |
| 2 | மாலைமலர் | 31.08.2019 | 14700 |

மேற்கண்டவாறு விளம்பரம் வெளியிட்டமைக்கான தொகைகளை தினபூமி மற்றும் மாலைமலர் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,

மேலூர் நகராட்சி.